# தொல்காப்பியம் குறிப்பிடும் அடிப்படை அணியிலக்கணம்

**இரா.குமார்**
உதவிப் பேராசிரியர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ், கலை அறிவியல் கல்லூரி
மயிலம்

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** II
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

புலவர்கள் மனதில் தோன்றும் கருத்துக்களைத் கற்பனைத் திறத்தாலும் அனுபவத்தின் முயற்சியாலும் புலமைப் பெருமைகளாலும் சொல்லழகு, பொருள் அழகு, உணர்ச்சிநுட்பம் முதலானவை ஒன்றுசேரப் பாடல் இயற்றும் முறை அணியிலக்கணம் எனப்படுகிறது. கவிதைகள் கலைத்திறனை வெளிப்படுத்திக் காட்டுவது அணியிலக்கணம், தொல்காப்பியர் உவமையை உவமையியலில் விரித்துக் கூறியுள்ளார். எனினும் பிற்காலத்தில் தோன்றிய அணிகள் பலவற்றின் கரு தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களிலும் காணப்படுகின்றன. அணி இலக்கணத்தின் வகைகளாக உவமையியலால் உவமவகையும், மெயப்பாட்டியலால் சுவை அணியின் வகையும், அகத்திணையியல், பொருளியல், உவமை இயல்களால் உள்ளுறை, உவமையணியும், ஒட்டணியும், பெயரியல், கற்பியல், பொருளியலால் இறைச்சிப் பொருள் அணியும் வெளிப்படையாக விரித்துக் கூறப்பட்டுள்ளன. வண்ணம், வனப்பு, பொருள்கோள், ஆகியன புதிய விளக்கங்களால் அறிய கிடக்கின்றன. பொருளணியையும், சொல்லணிகளையும் ஒருசேர வெளிப்படுத்திக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**நூற்பாவின் மூலம் அறியப்படும் அணிகள்**

தன்மையணி ஒருவனுடைய அல்லது ஒரு பொருளுடைய உண்மையான தன்மைகளை உள்ளபடியே அழகுற எடுத்துக் கூறுவது.

**செழித்தனள்: உரப்பினள்: சிறுகண் தீயுக**
**விழித்தள்: வைதனள்: வெய்து உயிர்த்தனள்**
**அழித்தனள்: அழுதனள்: அப்பொன் மாலையால்**
**குறித்தனள் நிலத்தை- அக்கொடிய கூனியே**

**(கம்பராமாயணப் பாடல்)**

இப்பாடலில் இராமன் முடிசூடுவதைக் கேட்ட கைகேயி கூனிக்கு பொன்மாலையைப் பரிசாகக்கொடுக்க அது பெறாத கூனியின் செயல்தன்மைகள் கூறப்பட்டுள்ளன. இதனை, இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல், (தொல்.சொல் சேனா-19) என்ற தொல்காப்பிய நூற்பாவினால் அறியப்படுகிறது. இவ்தன்மையணி இலக்கணம் தண்டியில்

**“எவ்வகைப் பொருளு மெய்வகை விளக்கும்**
**சொன்முறை தொடுப்பது தன்மையாகும்” (தண்டி-29)**

இந்நூற்பா தன்மை அணி இலக்கணத்திற்கு அடிப்படை இலக்கணமாக அமைந்துள்ளது.

**உருவகம் (Metaphor)**

உவமானமும் உவமேயமும் வெவ்வேறு பொருள் எனத் தோன்றாது ஒன்றுபோல் காட்டி உவமானத்தின் தன்மை முழுவதும் உவமேயத்தில் தோன்றும். தொல்காப்பியத்தில்

**"பொருளே உவமம் செய்தனர் மொழியினும்**
**மருன்று சிறப்பின.்.து உவம மாகும்"** **(இளம்பூரணர்-தொல் பொருள் - 280)**

என்னும் நூற்பா அமைந்துள்ளது. உவமையின் வடிவத்தை உள்ளடக்கியது இவ்விலக்கணம். இவ்வணி இலக்கணம் தண்டியலங்காரத்தை சார்ந்து உள்ளது.

**"உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்து**
**ஒன்றென மாட்டின் அ.்.துருவக மாகும்"** **(தண்டி - 36)**

என்று தண்டியில் உருவக அணியின் இலக்கணமாகத் தோன்றியுள்ளது.

**வேற்றுப் பொருள் வைப்பணி**

ஒரு சிறப்பான பொருளைக் கூறத்தொடங்கி, அதனை வலியுறுத்தி முடிக்க, வேறொரு பொதுவான உண்மையை அதனோடு தொடர்புபடுத்திக் கூறுதல் ஆகும்.

"**வேறுபட வந்த உவமைத் தேற்றம்**
**கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளா அல்"** **(இளம்பூரணர்-தொல் பொருள் - 305)**

என்னும் தொல்காப்பிய நூற்பாவால் பொருளைத் தெளிவாக விளக்குவதற்கு, உலகறிந்த வேறொரு பொருளைப் பொதுப்பொருளாய் ஒப்புமை காட்டும் உவமத் தோற்றம் பற்றிக் கூறுகிறது. இத்தோற்றம் தண்டியில் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

**"முன்னொன்று தொடங்கி மற்றது முடித்தற்குப்**
**பின்னொரு பொருளை யுலகறி பெற்று**
**ஏற்றிவைத் துரைப்பது வேற்றுப் பொருள் வைப்பே"** **(தண்டி - 47)**

இந்நூற்பா வேற்றுப்பொருள் வைப்பணிக்கு ஏதுவாக உள்ளது.

**வாழ்வினை நுதலிய மங்கலத்து நாள்**
**தாழ்வினை யதுவரச் சீரை சாத்தினான்**
**சூழ்வினை நான்முகத் தொருவன் சூழினும்**
**ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கப் பாலதோ** **(கம்பராமாயணப்பாடல்)**

இப்பாடலில் மரவுரி உடுத்தான் என்ற சிறப்புப் பொருளை, எவ்வளவு உயர்ந்தவனாயினும் ஊழ்வினை உறுத்துவந்து சேருமாயின், அது யாராலும் தடுக்கக்கூடியதன்று என்னும் பொதுப் பொருளோடு தொடர்புபடுத்திக் கூறுவதால் வேற்றுப்பொருள் வைப்பணி எனச் சான்று கூறப்படுகிறது.

**முன்னவிலக்கணி**

கவிஞன் ஒரு பொருளைக் குறிப்பால் மறுத்து மேன்மை தோன்றச் சொல்லுவது முன்னவிலக்கணி ஆகும். குறிப்பாக அல்லாமல் வெளிப்படையாக மறுப்பதும் இவ்வணியாகக் கொள்ளலாம்.

**"இவ்விடத் திம்மொழி இவரிவர்க் குரியவென்**
**றவ்விடத் தவரவர்க் குரைப்பது முன்னம்"** **(இளம்பூரணர்-தொல் பொருள் - 508)**

என்ற தொல்காப்பிய நூற்பாவில் இந்த இடத்தில் என்று சூழல் நோக்கியும், இந்த நேரத்தில் எனக் காலம் நோக்கியும் இவர்க்கு இம்மொழி உரியது எனத் தேர்ந்து அவர் கூற்றாக அம்மொழியை உரைப்பது முன்னம் என உணர்த்துகிறது. முன்னம் அமையப்படும் பாடல் நிகழ்ச்சி ஒருமையும், காலப்பொருத்தமும் பெற்றிருக்க வேண்டும் என்பதையும்,

**"ஒருநெறிப் பட்டாங் கோரியல் முடியிங்**
**கரும நிகழ்ச்சி இடமென மொழிப"** **(இளம்பூரணர்-தொல் பொருள் - 502)**
**"இறப்பே, நிகழ்வே எதிர தென்றுத்**
**திறத்தியல் மருங்கில் தெரிந்தனர் உணரப்**
**பொருள் நிகழ்வு உரைப்பது காலமாகும்"** **(இளம்பூரணர்-தொல் பொருள் - 503)**

என்னும் தொல்காப்பிய நூற்பாக்கள் தெளிவுபடுத்துகின்றன. இதனைப் பின்பற்றி

**"முன்னத்தின் மறுப்பின் அதுமுன்ன விலக்கே**
**மூவகைக் காலமும் மேவிய தாகும்"** **(தண்டி - 43)**

என தண்டியலங்காரம் முன்ன விலக்கணிக்கு இலக்கணம் வகுத்துள்ளது

**நிரல்நிறையணி**

கவிஞர் தம் செய்யுட்களில் முதலில் சொற்களை வரிசைப்படுத்துவர். அவற்றோடு தொடர்பு உடையவற்றைப் பின்னர் அதேமுறையில் பொருள்படுமாறு வரிசைப்படுத்திப் பாடுவது நிரல் நிறையணி ஆகும்.

**"நிரநிறுத் தமைத்தல் நிரனிறை"** **(இளம்பூரணர் தொல். பொருள் - 309)**
என்று கூறுவர் தொல்காப்பியர்.

**"நிரல்நிறுத் தியற்றுதல் நிரல்நிறை அணியே"** **(தண்டி - 67)**
இவ்வணி நிரல்நிறை அணிக்கு அடிப்படை இலக்கணமாக அமைந்துள்ளது.

**விரோத அணி**

இவ்வுலகத்தில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட சொற்களும் உண்டு. பொருள்களும் உண்டு. அவற்றைக்கொண்டு மாறுபாட்டுத்தன்மையின் விளைவு தோன்றக்கூறுவது விரோத அணி. இதற்கு 'முரணணி' என்ற மற்றொரு பெயரும் உண்டு.

**"மொழியினும் பொருளினும் முரணுதல்"** **(இளம்பூரணர் தொல். பொருள் - 400)**
எனத் தொல்காப்பியத்தில் முரண் தொடைக்கு இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. இத்தொல்காப்பிய விதிப்படி தண்டியில்,

**"மாறுபடு சொற்பொருள் மாறுபட்டு இயற்கை**
**விளைவுதர உரைப்பது விரோதமாகும்"** **(தண்டி - 82)**
விரோத அணிக்கு இலக்கணம் தொல்காப்பியத்தில் உள்ளன அறியமுடிகிறது.

**குறிப்பு வகையில் அறியப்படும் அணிகள்**

**தம்மேம்பாட்டுரையணி**

ஒருவனுடைய ஆற்றலைப் பிறர் அறியார், அவ்விடங்களில் தன்னுடைய ஆற்றலைத் தானே எடுத்தக் கூறுவர் தன்னைத்தானே புகழ்ந்து கூறுதல் குற்றமாயினும் சில இடங்களில் ஏற்றுக்கொள்ளப்படும். தொல்காப்பியத்தில் வீர மறவன் சொல்லை "நெடுமொழி" (தொல். பொருள் இளம்பூரணர் - 63) எனவும், வஞ்சினக்காஞ்சி (தொல். பொருள் இளம்பூரணர் - 77) எனவும் விளக்கப்படுகிறது. தொல்காப்பியத்தில் பெற்றுள்ளது இவ்வணி இலக்கணம்.

**"தான் தற்புகழ்வது தம் மேம்பாட்டுரை"** **(தண்டி - 71)**

**புகழாப்புகழ்ச்சியணி**

ஒன்றைப் பழித்துக்கூறுவது போன்ற தன்மையால் அப்பொருளுக்கு மேம்பாடு தோன்றும் படியாக உரைப்பது புகழாப்புகழ்ச்சியணி. இவ்வணி தொல்காப்பியத்தில் தொல்காப்பியர் தலைவனுக்குரிய கூற்றுகளைத் தொகுத்துக்கூறும் இடத்தில்

**"ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது**
**வானோர் அமிர்தம் புரையுமால்"** **(இளம்பூரணர் தொல். பொருள் - 144)**
என்று உவமிக்கும் பொருளைப் பழிப்பதுபோல் சொல்லி உயர்த்திக்கூறும் பாங்கு இடம் பெற்றுள்ளது. இது தண்டியில்,

**"பழிப்பது போலும் பான்மையின் மேன்மை**
**புலப்பட மொழிவது புகழாப்பகழ்ச்சி"** **(தண்டி - 84)**
என தண்டியின் அணியிலக்கணத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

**உதாத்தம்**

ஒருவனுடைய பொருட்செல்வத்தையும் உள்ளத்தின் செல்வத்தையும் வியக்கத்தக்கதாக உயர்த்திக் கூறுவர். தொல்காப்பியப் புறத்திணையியலில் செருக்களத்துத் தன் வேந்தன் பட அதுகண்டு கறுத்தெழுந்த படைத்தலைவன் வீரன் உருவனை நெருங்கிப் பொருத "நல்லிசை நிலையும்" (தொல். பொருள் இளம்-72), ஒருவன் பல உயிரைக் கொன்ற "நூலில்" நிலையும் (தொல். பொருள் இளம்-72)

**"வருவிசைப் புனலைக் கற்சிறை போல**
**ஒருவன் தாங்கிய பெருமை"** **(இளம்பூரணர் தொல். பொருள் - 65)**
தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. இப்பண்புகளின் ஒருங்கிணைப்பு தண்டியில்,

**"வியத்தகு செல்வமும் மெம்படும் உள்ளமும்**
**உயர்ச்சி புனைந்துரைப்பது உதாத்தம்"**
அடிப்படை இலக்கணமாக உதாத்தஅணி தோன்ற காரணமாக வித்திட்டுள்ளது.

**ஆர்வமொழியணி**

உள்ளத்தின்கண் நிகழும் ஆர்வத்தின் காரணமாக நிகழ்ச்சிகளை மிகுதிப்படுத்திக் கூறுவது. தொல்காப்பியத்தில், உடன்போக்கில் செல்லும் தலைமக்களைக் கண்ணுற்ற நொதுமலர் தம்மூரில் தங்கிச் செல்க எனத் தடுத்துக் கூறும் ஆர்வமொழி

**"பொழுது மாறும் உட்குவரத் தோன்றி**
**வழுவில ஆகிய குற்றங்காட்டலும்**
**ஊரது சார்பும் செல்லும் தேயமும்**
**ஆர்வ நெஞ்ச மொடு செப்பிய வழியினும்" (இளம்பூரணர் தொல். பொருள் - 43)**

என்ற கண்டோர் கூற்றில் இடம்பெற்றுள்ளது. இப்பண்பு தண்டியில்,

**"ஆர்வமொழி மிகுப்பது ஆர்வமொழியோ" (தண்டி - 68)**

என ஆர்வமொழி அணிக்கு இலக்கணமாக உள்ளது.

**தற்குறிப்பேற்றம்**

இயல்பாக நிகழும் நிகழ்ச்சியொன்றின்மீது தன் கருத்தை ஏற்றி அழகுறக் கூறுவது. தொல்காப்பியத்தில் ஆநிரை மீட்கச் செல்லும் வேந்தன் உன்னமரத்தைக் காணும் நிமித்தத்தை,

**"ஓடா உடல்வேந்து அடுக்கிய உன்னநிலை" (இளம்பூரணர் தொல். பொருள் - 63)**

தொல்காப்பியம் இயற்கையோடு தன்குறிப்பை ஏற்றிக் காணும் மரபு சுட்டுகிறது. தண்டியில்,

**"பெயரும் பொருளும் பெயராத பொருளும் என்றும்**
**இருபொருட்கண்ணும் இயல்பாக நிகழும் தன்மைமொழிய**
**கவிதான் கருதிய வேறொன்றினை அவற்றின் கண்**
**ஏற்றிச் சொல்லும் தற்குறிப்பேற்ற அணிக்கு" (தண்டி - 56)**

அடிப்படையாய் அமைந்துள்ளது.

**உத்திவகையால் உணர்த்தப்படும் அணிகள்**

**நுட்ப அணி**

பிறருடைய கருத்தை அறிந்து, அதற்குரிய மறுமொழியைச் சொல்லால் வெளிப்படுத்தாமல் குறிப்பாலோ செயலாலோ அரிதாக உய்த்துணரும்படி புலப்படுத்துதல் நுட்ப அணி ஆகும். உத்தி என்ற சொல்லுக்குத் 'தக்கதன்மை' என்பது பொருள். தொல்காப்பியர் கூறும் முப்பத்திரண்டு உத்திகளுள் புலன் நுணுக்கத்துடன் குறிப்பால் உணர்த்தும் "நுதலியறிதல்"(தொல்.பொருள் இளம்-656), சுட்டப்படுகிறது.

இது தண்டியில்,

**"தெரிபு வேறுகிளவாது குறிப்பினும் தொழிலினும்**
**அரிதுணர் வினைத்திறம் நுட்ப மாகும்" (தண்டி - 64)**

என்னும் நுட்ப அணிக்கு இலக்கணமாக அமைந்துள்ளது.

**சிலேடையணி**

இரட்டுற மொழிந்து இரண்டு சொற்களும் பொருள் கோடலை "ஞாபகங் கூறல்" (தொல். பொருள் இளம்-656), என்கிற தொல்காப்பியர் இதனை,

**"எழுத்தோ ஏன்ன பொருள்தெரி புணர்ச்சி**
**இசையில் திரிதல் நிலைஇய பண்பே" (தொல். பொருள் எழுத்து நச்.141)**

எனும் நூற்பாவில் இயைபுபடுத்திக் கூறியள்ளார். இக்கருத்து தண்டியில்,

**"ஒருவகைச் சொற்றொடர் பலபொருள் பெற்றி**
**தெரிதர வருவது சிலேடை யாகும்" (தண்டி - 76)**

சிலேடையணிக்கு இலக்கணமாகி உள்ளது.

**வண்ணத்தால் அறியப்படும் அணி**

**பின்வருநிலையணி**

சீர் அடிப்படையில் அமைந்து சொல்லிய சொல்லினான சொல்லப்படும் பொருளைச் சிறக்கச் செய்வது "ஏந்தல் வண்ணம்" (தொல். பொருள் இளம்-532), என்று தொல்காப்பியர் கூறும் இச்சொல்லு தண்டியில்,

**"முன்வருஞ் சொல்லும் பொருளும் பலவயிற்**
**பின்வரும் எனில் பின்வரு நிலையே"** **(தண்டி - 42)**

பின்வருநிலையணி, சொற்பின்வருநிலையணி, சொற்பொருள் பின்வருநிலையணிகளின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்துள்ளது.

**வனப்பு வகையில் அறியப்படும் அணி**

**பாவிகம்**

**"தொன்மைதானே**
**உரையொடு புணர்ந்த பழமை மேற்றே"** **(தொல். பொருள் இளம் - 538)**

எனும் தொல்காப்பியம் நூற்பாவானது மக்களால் பேசப்பட்டு வந்த பழங்கதைகளையும் வரலாறுகளையும் தொடர்நிலைச் செய்யுளில் இயற்றும் அமைப்பைச் சுட்டியுள்ளது. பாவிக அணிக்கு வழிகாட்டியாக தண்டியில் "பாவிகம் என்பது காப்பியப் பண்பே" (தண்டி-91) பாவிக அணி தோன்றுவதற்கும் காரணமாக இருந்துள்ளது.

**பொருள்கோளால் அறியப்படும் அணிகள்**

**பூட்டுவில்**

தொல்காப்பியம் மொழிபுணர் இயல்புகளை "நிரல்நிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று" (தொல். பொருள் சேனா.404) என நான்காக வரையறுத்துள்ளது. தொல்காப்பியத்தைப் பின்பற்றி நன்னூல் அவற்றை பொருள்கோள் எனச் சுட்டி,

**"யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூட்**
**டாப்பிசை யளைமறி யாப்புக் கொண்டு கூட்**
**டடிமறி மாற்றெனப் பொருள்கோள் எட்டே"** **(நன்-விரு. 411)**

என விரித்துக் கூறியுள்ளது. நன்னூல் நெறிகளின் வெளிப்பாடே மாறனலங்காரத்தில் செய்யுளின் இறுதிச் சொல்லும் முதற்சொல்லும் சேர்ந்தே பொருள்கொள்ள அமையும் "பூட்டுவில்" (மா.அ.175) அணிக்கு இலக்கணமாக அமைந்துள்ளது.

**தொல்காப்பியம் காட்டும் சொல்லணிகள்**

**"நிறுத்த சொல்லின் ஈறாகெழுத்தோடு**
**குறித்து வரு கிளவி முதலெழுத்தியைய"** **(தொல். எழுத்து நச்.141)**

என்ற தொல்காப்பிய இலக்கணம், வீரசோழியத்தில்,

**"ஆதியும் ஈறும் இடையும் அடி ஒன்றிலே மடக்கும்"** **(வீர.சோ - 177)**

என மடக்கணிக்கு இலக்கணமாகி வந்துள்ளது.

**முடிவுரை**

தொல்காப்பியத்தால் அறியப்படும் அணியிலக்கணங்கள் தொல்காப்பியத்தை ஒட்டி அணியிலக்கணம் பிறந்துள்ளன. கற்றனைந்தூறும் அணியிலக்கண கடலாக ஒளிர்ந்துள்ளன. தொல்காப்பிய அணியிலக்கண மரபை ஆராயும்போது அதன் பொருளையும், சிறப்பும், நுண்மையும், புலப்படுத்தக்கூடியவகையில் பெற்றிருப்பது சிறப்பிற்குரியதாகும். தொல்காப்பியம் ஒட்டியே தண்டியலங்காரத்தில் உள்ள அணியிலக்கணங்கள் சார்ந்துள்ளன. தொல்காப்பிய செய்யுட்களில் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் தண்டியலங்காரத்தில் இடம் பெற்றுள்ளதையும் அறியமுடிகிறது. அணியிலக்கணங்கள் தொல்காப்பியத்தின் அடிப்படை இலக்கணமாக பெற்றிருப்பது சிறப்பிற்குரியதாகும்.